தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆனி 27, திருவள்ளுவர் ஆண்டு—2045

2014 ஜூலை 11, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு."

எண் பற்றிய அறிவியல் கல்வியும், மொழி பற்றிய மொழியியல் கல்வியும் மக்களுக்கு இரண்டு கண்கள் போன்றவை ஆகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

105—

புதிய உபகோட்டம்

***36205—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதி, முதுகுளத்தூர் மின் உபகோட்டத்தை இரண்டாகப் பிரித்து திருவரங்கம் கிராமத்தில் புதிய உபகோட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) முதுகுளத்தூர் உபகோட்டத்தின்கீழ் 4 பிரிவு அலுவலகங்கள் மட்டுமே இயங்கி வருகின்றன. முதுகுளத்தூர் மின் உபகோட்டத்தைப் பிரித்து திருவரங்கத்தில் புதிய மின் உபகோட்டம் உருவாக்க போதிய பிரிவு அலுவலகங்கள் இல்லாததால் அங்கு புதிய மின் உபகோட்டம் உருவாவதற்கான வாய்ப்பு தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*

திரு. மு. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்மையின் உறைவிடமாய், ததும்பாத நிறைகுடமாய், தமிழ் இனத்தின் வரைபடமாய், பசித்தோருக்கு உணவு அளிக்கும் அன்னபூரணியாய், தமிழக மக்களை என்றும் காத்து நிற்கும் காவல் தெய்வமாய், (மேசையைத் தட்டும் ஒலி) மழைநீர் சேகரிப்பை உலகிற்கு உணர்த்திய உண்மைத் தாயே! மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூர் தொகுதி விவசாயிகள் அதிகமாக வசிக்கும் கிராமங்களைக் கொண்டது. அந்த உபகோட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை. வருங்காலத்திலாவது அதை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முதுகுளத்தூர் தொகுதியில் கமுதி, முதுகுளத்தூர், வாலிநோக்கம் ஆகிய பகுதிகளில் 110/33 கே.வி.ஏ. துணை மின்நிலையங்களும், சாயல்குடி, பெருநாளி, முதுகுளத்தூர் ஆகிய பகுதிகளில் 33/11 கே.வி.ஏ. துணை மின்நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. முதுகுளத்தூர் தொகுதியில் மட்டும் 112 மின்மாற்றிகளும் 18,400 மின் இணைப்புகளும் செயல்பட்டு வருகின்றன. எனவே, அந்தப் பகுதிகளில் குறைந்த மின்னழுத்தம் காரணமாக மின்சாரம் இருந்தும் மின்தடை ஏற்படுகிறது. எனவே, 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையத்தை 110/33 கே.வி.ஏ. துணை மின் நிலையமாகத்

தரம் உயர்த்தித் தரவேண்டும். முதுகுளத்தூர் அருகில் செல்லும் பரமக்குடி, வாலிநோக்கம் மின் வழித்தடத்தைப் பிரித்து, முதுகுளத்தூருக்குப் புதிய மின் வழித்தடம் அமைத்து, அந்தப் பகுதியில் தடையில்லா மின்சாரம் வழங்கவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மின் பகிர்மான வட்டத்தில் உள்ள முதுகுளத்தூர் தொகுதியில் உள்ள முதுகுளத்தூர் மின் உபகோட்டத்தின்கீழ் சிக்கல், சாயல்குடி, கடலாடி மற்றும் முதுகுளத்தூர் ஆகிய 4 பிரிவு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. அதேபோல, பரமக்குடி உபகோட்டத்தில் சத்திரக்குடி, பார்த்திபனூர், நயினார்கோவில் மற்றும் பரமக்குடி ஊரகம் ஆகிய 4 பிரிவு அலுவலகங்கள் உள்ளன. இதில் திருவரங்கம் கிராமம், பரமக்குடி ஊரகப் பிரிவு அலுவலகத்தின்கீழ் வருகிறது. வாரிய விதிகளின்படி, ஒரு புதிய உபகோட்டத்தை உருவாக்கவேண்டுமென்று சொன்னால், குறைந்தது 3 பிரிவு அலுவலகங்கள் வேண்டும். அதேபோல, குறைந்தபட்சம் அங்கே 110/11 கே.வி.ஏ., 110/22 கே.வி.ஏ., திறன்கொண்ட ஒரு துணை மின் நிலையம் வேண்டும். இப்போது முதுகுளத்தூர் தொகுதி உபகோட்டத்தில் 4 பிரிவுகள்தான் இருக்கின்றன. அதைப் பிரிக்கின்றபோது இரண்டு உபகோட்டங்களாகப் பிரிக்கமுடியும். இரண்டு உபகோட்டங்களாகப் பிரிக்கும்போது குறைந்தபட்சம் 3 அல்லது 4 பிரிவு அலுவலகங்களாவது தேவை. ஆகவேதான், மேற்படி 4 பிரிவு அலுவலகங்கள் இருப்பதைப் பிரிப்பதற்கு வாரிய விதிகளின்படி சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—05

அடுத்தபடியாக, முதுகுளத்தூர் மின் உபகோட்டத்தில் தற்போது 369 மின் மாற்றிகளும், மொத்தம் 47,292 மின் இணைப்புகளும் இருக்கின்றன. குறைந்தபட்சம் ஒரு மின் உபகோட்டத்தை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு குறைந்தபட்சம் 500 மின் மாற்றிகளாவது இருக்க வேண்டும் மற்றும் 64,400 மின்

இணைப்புகள் இருக்க வேண்டும். வாரிய விதிகளின்படி 64,400 மின் இணைப்புகளுக்கு மேலே இருந்தால்தான், அடுத்த மின் உபகோட்டம் அமைக்க முடியும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பகுதியிலே, இப்பொழுது 369 மின்மாற்றிகளும், 47,000 மின் இணைப்புகளும்தான் இருக்கின்றன. இந்தப் பிரிவு அலுவலகத்திற்குத் தேவையான மின் இணைப்புகள்கூட தற்பொழுது போதிய அளவுக்கு இல்லை என்பதால், வாரிய விதிகளின்படி புதிய மின் உபகோட்டம் அமைக்க சாத்தியமில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அந்தப் பகுதியிலே 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையத்தை 110/11 கே.வி.ஏ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அந்தப் பகுதியிலே உள்ள மின் பளுவின் அளவு குறித்து ஆய்வு செய்து, அந்தப் பகுதியிலே ஒரு துணை மின் நிலையத்தைப் புதிதாகத் தரமுயர்த்துவதற்குப் பதிலாக, தேவைப்பட்டால் மற்றொரு 33/11 கே.வி.ஏ., துணை மின் நிலையத்தைக்கூட உருவாக்கிக்கொள்ளலாம் அல்லது இருக்கின்ற துணை மின் நிலையங்களையே 'Power Transformers' என்று சொல்வார்கள்; அதாவது, அந்த மின் மாற்றியில் தேவையான அளவிற்கு மின் திறனை அதிகப்படுத்திக்கொள்ளலாம். அந்தப் பகுதியினுடைய மின் தேவையைக் கருத்தில்கொண்டும், தற்பொழுது இருக்கின்ற மின் பளுவை கணக்கில் எடுத்தும், தேவை ஏற்படின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே புதிய துணை மின் நிலையமோ அல்லது இருக்கின்ற துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்துவது பற்றியோ மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

திரு. மு. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத்திலாவது அந்தப் பகுதியில் நிலவும் குறைந்த மின்னழுத்தத்தை சரி செய்வதற்காக, அந்தப் பகுதியில் 110/11 கே.வி.ஏ., துணை மின் நிலையத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றேன். புதிதாக ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்றால், அந்தப் பகுதியில் இப்பொழுது இருக்கின்ற மின் பளுவைக் கணக்கில் கொண்டு, அதிகமான மின் பளு இருக்குமானால், அந்தப் பகுதியிலே புதிதாக ஒரு துணை மின் நிலையம் அமைக்கலாம் அல்லது தேவைக்கு ஏற்ப, இருக்கின்ற துணை மின் நிலையத்தைத் தரமுயர்த்தலாம் என்று சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே கேட்ட கேள்வியைத்தான் மீண்டும் கேட்டிருக்கிறார். அங்கே இருக்கின்ற மின் பளுவைக் கருத்தில்கொண்டு, தேவை ஏற்படின், அந்தப் பகுதியிலே புதிய துணை மின் நிலையமோ அல்லது இருக்கின்ற துணை மின் நிலையத்தைத் தரமுயர்த்துவதற்கோ உரிய ஆய்வுகளைச் செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியிலுள்ள கொருக்காத்தூர் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகச் சொல்லியிருந்தார்கள். அதை, இந்த ஆண்டு பரிசீலிக்கக் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே அதிகப்படியான விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகள் இருக்கின்றன. எனவே, மின் பளுவைக் கருத்திலே கொண்டு அந்தப் பகுதிக்கு ஒரு புதிய துணை மின் நிலையம் அமைத்துத் தருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எந்தெந்தப் பகுதிகளிலே குறைந்த*

மின்னழுத்தம் இருக்கிறதோ அந்தந்தப் பகுதிகளிலே அல்லது வளர்ந்து வரும் பகுதிகளைக் கணக்கிட்டு, அந்தந்தப் பகுதிகளுக்கு மின் பளுவில் ஏற்படுகின்ற மின் தேவைக்கேற்ப, முன்னுரிமை அடிப்படையிலே, அங்கே புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதியிலேகூட, உடனடியாக, வேண்டிய ஆய்வுகளை இந்த ஆண்டிலே செய்து, தேவை ஏற்படின், ஒரு புதிய துணை மின் நிலையமோ அல்லது இருக்கின்ற துணை மின் நிலையத்தைத் தரமுயர்த்துவதற்கோ மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முற்பகல் 10—10

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதிக்குட்பட்ட புத்தூர் ஊராட்சியைச் சுற்றி சேகளூர், மானம்பாடி, அணைக்குடி, திருவள்ளுவக்குடி ஆகிய ஊராட்சிகள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் 10,000 ஏக்கருக்கு மேலாக விளை நிலங்கள் உள்ளன. 20—க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். புத்தூரில் துணை மின் நிலையம் வேண்டும் என்று கேட்டதற்கிணங்க, கும்பகோணம் கோட்டம், செயற் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர்கள் வருகை தந்து, புத்தூர் கிராம மக்களை எல்லாம் ஒன்றிணைத்து இடத்தைத் தேர்வு செய்தார்கள். மூன்று இடங்களைப் பார்த்ததில், ஓர் இடத்திற்குச் சாலை வசதி வேண்டும் என்பதால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதைச் செய்து தருவேன் என்று சொல்லியும் இருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே புத்தூரில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு முன்வருவார்களா? அதேபோல், பந்தளமேட்டிலும் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜூலை 11]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதிக்குட்பட்ட அந்தப் பகுதியிலே, புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில்கூட அதற்குத் தேவையான அளவுக்கு நிதியை ஒதுக்கித் தருகிறேன் என்றும் சொல்லியிருக்கிறார். பொதுவாக புதிய துணை மின் நிலையம் அமைக்கின்றபோது, இடம்தான் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. இடம் கண்டறிவதிலே அல்லது இடத்தைக் கையகப்படுத்துவதிலேதான் காலதாமதம் ஏற்படுகிறது. சில நேரங்களிலே நீதிமன்றத்திற்குச் சென்றுவிடுகிறார்கள் அல்லது உள்ளூர் பிரச்சினைகளை உருவாக்கிவிடுகிறார்கள். ஏதாவது ஒரு பிரச்சினை வந்து விடுகிறது. அதனால்தான் காலதாமதம் ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியிலே நிலம் தயாராக இருக்கிறது, பிரச்சினை ஒன்றும் இருக்காது என்று சொல்லியிருக்கிறார். எனவே, அந்தப் பகுதியிலே ஏற்படுகின்ற மின் பளுவையும் ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படி தேவை ஏற்படின், இந்த ஆண்டிலேயே ஒரு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான முயற்சிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள்.

திரு. கா. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட கீழ்கோத்தகிரி என்ற பகுதியில், ஒன்னட்டி என்ற இடத்தில் ஒரு துணை மின் நிலையம் கட்டி முடிக்கப்பட்டு இன்றுவரை திறக்கப்படாமல் உள்ளது. கடந்த கூட்டத் தொடரில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டபோது, அதை விரைவில் திறப்பதற்கு முயற்சி செய்யப்படும் என்று கூறினார்கள். அது செயல்பாட்டுக்கு வந்தால், அப்பகுதி மக்களுக்கும், சுற்றுவட்டாரப் பகுதி மக்களுக்கும் மிகப் பெரிய அளவில் பயன் ஏற்படும். எனவே, எப்பொழுது திறக்கப்படும் என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கையை மின்சார வாரிய அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

106—

சாலையை அகலப்படுத்துதல்

***32256—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, பூவன்கோடு—ஆற்றூர் இணைப்புச் சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) பத்மநாபபுரம் தொகுதி, டேப்சாலை என்று அழைக்கப்படும் பூவன்கோடிலிருந்து ஆற்றூர் இணைப்புச் சாலையை ரூபாய் 109 இலட்சம் செலவில் இருவழிச் சாலையாக அகலப்படுத்தும் பணி முடிக்கப்பட்டு, தற்போது போக்குவரத்துக்குப் பயன்பாட்டில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.